<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MC. No.27/2025</u>

PW:1

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. காவியா | த/ பெ. | திரு. அன்பழகன் |
| கிராமம் | : | தீபங்குடி | தாலுக்கா | குடவாசல் |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் | வயது | 23 |

<u>**முதல்விசாரணை**</u>

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 1ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 06.09.2024 ஆம் தேதியில் **எனக்கும் எதிர்மனுதாரக்கு நடைபெற்ற திருமண பத்திரிக்கை அசல் ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 06.09.2024 ஆம் தேதி **எனக்கும் எதிர்மனுதாரக்கு நடைபெற்ற திருமணத்தின் திருமண புகைப்படம் எண்ணிக்கை - 1அசல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 14.05.2025 ஆம் தேதிய **எதிர்மனுதாரர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 21.05.2025 ஆம் தேதிய **நான் கொடுத்த பதில் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 02.11.2024 ஆம் தேதிய **எதிர்மனுதாரர் கனரா வங்கியில் நகை வைத்தற்காக இரசீது நகல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) **என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.21 12:50:53 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்